**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 18/2024 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | குமார் | த–பெ /க.பெ. | சுப்பிரமணியம் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 49/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆட்டோ கன்சல்டன்ட் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.06.2026**

---

**11.06.2026**
**<u>குறுக்கு விசாரணை:</u>**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.A. படித்துள்ளேன். என்ன தொழில் செய்கிறேன் என்றால் பழைய கார்களை வாங்கி விற்பனை செய்து வருகிறேன். எனது முகவரி காரைக்குடி கண்ணதாசன் நகர் என்றால் சரிதான். எதிரி எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் காரைக்குடியில் கூத்துப்பொட்டல் என்ற இடத்தில் இருக்கிறார். குறிப்பான விலாசம் தெரியாது என்றால் சரிதான், நேரில் வீட்டிற்கு சென்று பார்த்துள்ளேன். காரைக்குடியில் உள்ள SMS பள்ளியில் வேலை பார்க்கிறார், அங்கும் பார்த்துள்ளேன். எதிரிக்கு நிரந்தர வேலையா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி யார் மூலமாக எனக்கு எவ்வாறு பழக்கம்என்றால் சுமார் 10 வருடம் முன்பு எதிரியின் உறவினர் என்னிடம் கார் வாங்கியதன் மூலம் எனக்கு பழக்கம். உறவினர் பெயர் தெரியுமா என்றால் தற்போது தெரியாது. எதிரியின் தந்தை மற்றும் கணவர் பெயர் தெரியுமா என்றால் தந்தை வள்ளி, கணவர் பெயர் தெரியாது. 8 வருடம் கழித்துதான் எதிரியை

மீண்டும் தெரியும் என்றால் சரியல்ல, இடைபட்ட காலத்தில் கொடுக்கல் வாங்கல் இருந்தது. எந்தெந்த தேதிகளில் எவ்வளவு தொகை கொடுத்துள்ளேன் என்றால் குறிப்பாக தெரியாது. ஆனால் சரியாக திருப்பி செலுத்திவிடுவார். கொடுத்ததாக கூறும் வழக்கு கடனை எந்த தேதியில் என்னிடம் கேட்டார் என்று என் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, 24.11.2023 என கூறியுள்ளேன் அன்றைய தினமே பணம் என் வங்கியில் இருந்து எடுத்து கொடுத்துவிட்டேன். கேட்ட தினமே நான் பணம் கொடுத்தேனா என்றால் 3 நாட்களுக்கு முன்பே கேட்டார். இந்த விபரத்தை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) என் வங்கியில் இருந்து பணம் எடுத்து எதிரிக்கு கொடுத்தேனா என்றால் சரிதான். எனது வங்கி கணக்கை பார்த்தால் 24.11.2023 ல் ரூ. 2,00,000/- எடுத்தற்கான குறிப்பு இருக்குமா என்றால் இருக்கும். எனது வங்கி கணக்கை தாக்கல் செய்ய தயாரா உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். பணம் வாங்கும்போது யார் யார் வந்தார்கள் என்றால் எதிரி மட்டும் சிவன் கோவில் அருகில் உள்ள எனது அலுவலகத்தில் கேட்டார். பணம் கொடுக்கும்போது ஏதாவது ஆவணம் எதிரியிடம் இருந்து பெற்றேனா என்றால் காசோலை பூர்த்தி செய்து கொடுத்தார். புரோநோட் எதாவது பெற்றேனா என்றால் இல்லை. பணம் கொடுத்த நேரம் தெரியுமா என்றால் தெரியாது. சிவன் கோவில் அருகே நான் பைனான்ஸ் அலுவலகம் வைத்துள்ளேன் எ ன்றால் இல்லை, எனது கார் அலுவலம் ஆகும். கார் அலுவலகத்தில் வைத்து பைனான்ஸ் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. கொடுத்ததாக கூறப்படும் தொகைக்கு வட்டி எவ்வளவு என்றால் 3 மாதத்தில் பணத்தை திருப்பி தருவதாக கூறியதால் வட்டி எதுவும் கேட்கவில்லை. இந்த விபரத்தை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், 16.12.2023 என தேதி நிரப்பி காசோலை கொடுத்துள்ளார் என்பதனால் அதை கூறியுள்ளேன். காசோலையை எதிரி பூர்த்தி செய்து கொண்டுவந்தார்

என்றாலும் என் முன்னால் பூர்த்தி செய்யவில்லை என்றாலும் சரிதான்.

3) எதிரியின் தாயார் என்னிடம் கடன் பெற்றுள்ளாரா என்றால் கொடுக்கல் வாங்கல் இருந்தது, ஆனால் தற்போதைய வழக்கு கடன் எதிரிதான் தனிப்பட்ட முறையில் பெற்றார், எதிரி மகளுக்கு லோன் அப்ளை செய்தார் என்றும், அதைபெற காலதாமதம் ஏற்பட்டதால் என்னிடம் கடன் பெற்றார். எதிரி எனக்கு உறவினர் இல்லை என்றால் சரிதான். நான் வருமான வரி தாக்கல் செய்கிறேனா என்றால் தாக்கல் செய்கிறேன். ஆண்டிற்கான வரவு செலவு விபரத்தை வருமான வரியில் காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். எதிரிக்கு கொடுத்த ரூ.2,00,000/- வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். எனது வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய தயாரா என்றால் தயாராக இருக்கிறேன். காரைக்குடி இடையார் தெருவில் உள்ள கலாவதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு கலாவதியை தெரியும் என்றாலும் அவரிடம் இருந்துதான் பணம் பெற்று கொடுக்கல் வாங்கல் தொழில் செய்கிறேன் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4) ம.சா.ஆ.1 வழக்கு காசோலையை நிரப்பியது யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பூர்த்தி செய்த படி எதிரி கொண்டுவந்தார். ம.சா.ஆ.1 வழக்கு காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும் நிரப்பியுள்ள விபரத்திற்கும் மை வேறு பாடு உள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கு கடன் கொடுப்பதற்கு எனக்கு போதி ய வருமானம் இருந்தது என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் சமர்பிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றாலும் எதிரியின் அம்மா வள்ளி கலாவதியிடம் பணம் கேட்டார் என்றாலும், அதற்கு கலாவதியின் பணம் என்னிடம் இருந்ததால் அந்த

பணத்தை எதிரியின் தாயார் வள்ளிக்கு பெற்றுக்கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் இருந்து எந்த ஒரு பணம் பெறவில்லை என்றாலும், வழக்கு காசோலையை என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் தயார் கலாவதியிடம் பெற்ற எதிரியின் காசோலையை நிரப்பாமல் கொடுத்து வைத்திருந்தார் என்றாலும், நான் மற்றும் கலாவதி மோசடியாக பணம் பெறுவதற்காக காசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. 2023 ஜனவரியில் எதிரியின் அம்மா எனக்கு வங்கி மூலமாக பணம் செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல, அப்போது பெற்ற தொகையை திருப்பி செலுத்தியிருப்பார். எந்த கடனிற்கு என்று எனக்கு தெரியாது என்றால் பழைய கடனுக்கு போட்டிருக்கலாம், குறிப்பாக தெரியாது. பணத்தை திருப்பி பெற்றபின்னர் காசோலையை திருப்பி தராமல் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு அறிவிப்பு பெற்ற பின்பு எதிரியின் தாயார் என்னை சந்தித்து கேட்டதால் நான் மேல்நடவடிக்கை எடுக்க மாட்டேன் என்று கூறியதால் அறிவிப்பிற்கு எந்த ஒரு பதிலும் அளிக்கவில்லலை என்றால் சரியல்ல, அவ்வாறு என்னிடம் கேட்டதில்லை. ரூ. 20,000/– மேற்பட்ட தொகை வங்கி மூலமாகத்தான் பரிவர்த்தனை செய்யவேண்டும் என்று சொன்னால் ரொக்கமாக கேட்டார், மற்றும் அவசர தேவை என்று கேட்டதால் கொடுத்தேன். வழக்கின் முக்கியமான விபரங்களை எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றாலும் அதற்காக வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.11 05:13:58 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.